ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1952 - 2016 ජනවාරි මස 29 වැනි සිකුරාදා - 2016.01.29

*1952 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 568 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 570 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## கொபைகனே பிரதேச சபை

வடமேல் மாகாண அரச சேவையில் உள்ளூராட்சி பணியாட்தொகுதியில் கீழ் காணப்படுகின்ற பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்காக கொபைகனே பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் நிரந்தர வதிவாளர்களிடத்திலிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

| தொடர் இலக்கம் | பதவிப்பெயர் | சேவை வகை | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் |
|---|---|---|---|---|
| 1. | பாதை தொழிலாளி | தொழில்நுட்பம் அற்ற | 1 | மாதாந்த (பொ.நி.சு. 06/2006 IV) படி ரூபா 11,730 - 10 × 120 – 10 ×130 – 10 x 145- ரூபா 17,600 (PL1 2006A) நான்காவது சம்பள திட்டத்திற்கு முன் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். |

**தொழில்நுட்பம் அற்ற**

**2. ஆரம்ப கல்வித்தகைமை.-**

(அ) கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத)

(ஆ) இவ் ஆட்சேர்ப்பு திட்டம் செயற்படுத்தப்படும் திகதி அத் தொழில்நுட்பமற்ற பதவிக்காக அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அச்சந்தர்ப்பத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தின் கல்வித் தகைமை உரித்தாகும்.

**வயது**.- உரிய பதவிக்காக விண்ணப்பப் படிவம் பொறுப்பேற்கும் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் மற்றும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

**3. தேவையான வேறு தகுதிகள்.-**

(i) விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் கடைசி திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர சேவையாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.).

(ii) விண்ணப்பதாரி பரம்பரையினால் அல்லது பதிவு மூலம் இலங்கை குடியுரிமையுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரி 3 வருடங்களுக்கு குறையாத காலத்தினுள் கொபைகனே அதிகாரப்பிரதேசத்தினுள் நிரந்தர வதியுனராக இருத்தல் வேண்டும். (வாக்குரிமை பெயர் பட்டியல் மூலம் அல்லது பிரதேச செயலாளரினால் வழங்கப்படுகின்ற சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(iv) நல்லொழுக்கமும் ஆரோக்கியமாகவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

(v) விண்ணப்பதாரிகள் தண்டனைக்குரிய சட்டப்படி நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தலாகாது.

**சேர்த்துக் கொள்ளப்படும் முறை**.- இந்த பதவிக்காக முறையான நேர்முகப் பரீட்சை மூலம் மற்றும் எழுத்துமூல பரீட்சையின் மூலம் தகுதியாயின் மாத்திரம் உரிய பதவிக்காக சேர்த்துக்கொள்ளப்படும்.

**4. வேறு பொது நிபந்தனைள்.-**

* விண்ணப்பதாரி பரம்பரையாகவோ, பதிவினாலோ இலங்கை குடியுரிமையுள்ளவராக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் கடைசி திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
* நல்லொழுக்கமும் ஆரோக்கியமாகவுள்ளராகவும் இருத்தல் வேண்டும்.
* தண்டனைச்சட்டக்கோவைப்படி நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெறாதவராக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் கடைசித் திகதிக்கு 3 வருடங்களுக்கு குறையாத காலத்தினுள் கொபைகனே பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும். (பதிவினை வாக்காளர் பட்டியல் மூலம் அல்லது பிரதேச செயலாளரினால் வழங்கப்படுகின்ற சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

* அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் பொறுப்பேற்கும் கடைசித் திகதிக்கு 5 வருட காலத்தினுள் வழங்கப்பட்ட சம்பள உயர்வுகள் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பப் படிவம் கோரல் அல்லது கோரும் சந்தர்ப்பத்தில் அல்லது ஆட்சேர்ப்பு காலதாமதப்படுத்துவதற்கு அல்லது இவ் அறிவித்தலினை இரத்துச் செய்வதற்கான அதிகாரம் கொபைகனே பிரதேச சபையின் செயலாளரின் உரிமையாகும். அரசினால் அல்லது மாகாண அரச சேவையில் இருந்து விலக்கப்பட்டவராக இருத்தலாகாது.

5. விண்ணப்பப் பத்திரத்துடன் கீழ் காணப்படும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ்;
(iii) ஆள் அடையாள அட்டை;
(iv) கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் ;
(v) தற்போது இந் நிறுவனத்தில் சேவை புரிபவராயின் சேவைச் சான்றிதழ்.

6. (i) விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவப்படி அமைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 2016.02.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக "செயலாளர், கொபைகனே பிரதேச சபை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவத்தினை இடப்படுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பாதைகள் தொழிலாளர் பதவிக்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

ஆர். ஏ. என். பீ. ராஜபக்ச,
செயலாளர்,
கொபைகனே பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கொபைகனே.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கொபைகனே பிரதேச சபை**

தேர்ச்சியற்ற பதவிக்கான விண்ணப்பப்படிவம்

01. (i) விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் :----.
(ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.
02. நிரந்தர முகவரி :----.
03. தேசிய ஆளடையாள அட்டையின் இலக்கம் :----.
04. ஆண்/பெண் :----.
05. பிறந்த திகதி :----.
வருடம் :----, மாதம் :----, திகதி :----.
06. விண்ணப்பப் பத்திரம் பொறுப்பேற்கப்படும் திகதிக்கு வயது :-
07. திருமணமானவர்/திருமணமாகாதவர் பற்றி :----.
08. தேசிய இனம் :-----.
09. நீங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாகவா? பதிவு முறையிலா? :----.
10. கல்வித் தகைமை :----.
11. வேறு தகைமைகள் :-----.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், பிழையற்றதும் என்றும் உறுதிப்படுத்துகின்றேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும், பிழையானதும் என்று இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவர் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடுமின்றி சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

*தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளின் நிறுவகத் தலைவரின் சான்றிதழ் :*

*இந்த விண்ணப்பதாரியாகிய திரு./ திருமதி/ செல்வி ............................................................ தற்போது இந்த நிறுவகத்தில் ................................................... ஆக சேவை செய்கின்றார். அவரை சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எந்தவிதத்திலும் விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் கடைசி திகதிக்கு 5 வருட காலத்தினுள் எவ்வித தண்டனையும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் தண்டனைக்கும் உள்ளாகியில்லாதவர் என்றும் அந்த 5 வருடத்தினுள் எல்லா சம்பள உயர்வுகளும் பெற்றுள்ளார் எனவும் உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பப்பத்திரம் அனுமதித்து முன்வைக்கின்றேன்/முன்வைக்கவில்லை.*

----,
*திணைக்கள/ நிறுவன*
*அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட*
*உத்தியோகத்தரின் கையொப்பம்*

*பெயர் :----.*
*பதவி :----.*
*திணைக்களம் :----.*
*திகதி :----.*

*1-1106*

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

*அபிவிருத்தி செய்யப்படாத காணி வரி அறவிடல் – 2016*

*இலங்கை சட்ட வரைவு கோவையின் (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களிற்கமைய மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 247 (ஈ) ஆம் பிரிவின்கீழ் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையினால் 2015 ஆம் ஆண்டிற்காக அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் விடயத்தில் வரி அறவிடல்*

*ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் நிர்வாக எல்லைகளிற்குள் அமைந்துள்ள ஏதேனும் காணியில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக தகைமையுள்ளபோது அல்லது நிலையாக இல்லாவிட்டால் ஒழுங்குமுறையில் கமம் செய்வதற்கு தகைமையுள்ளபோது இம்மாநகர சபையின் கருத்திற்கமைய இயலுமான செலவில் அவ்விடத்தில் அச்சொல்லப்பட்ட ஏதேனும் அலுவல்களிற்காக அபிவிருத்தி செய்ய முடியும்போது,*

*(அ) அக்காணியில் கட்டிடங்கள் எதுவும் நிர்மாணிக்கப்படவில்லையாயின் ; அல்லது*

*(ஆ) அக்காணியின் கட்டிடங்களிற்கு உண்மையிலே ஆட்பட்டிருக்கும் நில விஸ்தீரணம் மற்றும் அக்காணியின் முழு நில விஸ்தீரணத்திற்கிடையிலுள்ள வீதம் பிரேரணை நிறைவேற்றலின் மூலம் சபையினால் பெறப்பட்ட குறிப்பிட்ட வீதத்திற்கு குறைவாயின் ; அல்லது*

*(இ) நிலையாக இல்லாவிட்டால் ஒழுங்குமுறையில் செய்யப்படும் கமத்தொழிலிற்கு அவ்விடத்தை பயன்படுத்தவில்லையாயின் ;*

*அக்காணிகளுக்காக அந்நிலப் பெறுமதியின் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு வீதப்பெறுமதியின் 2% வரியை அறவிடல் வேண்டும் :-*

| | |
|---|---|
| *1. 6 பேர்ச்சுகளுக்குக் குறைந்த காணிகளில் 2000 சதுர அடி வரை வீடு நிர்மாணிப்பதற்கு முடிந்துள்ளபோதிலும் அவ்வாறு அமையப்பெறாவிடில் நிலத்தின் முதலீட்டு பெறுமதியின்* | *0.5%* |
| *2. 6 பேர்ச்சுகளிலிருந்து 10 பேர்ச்சுக்கள் வரையான காணிகளில் 3000 சதுர அடி வரை வீடு நிர்மாணிப்பதற்கு முடிந்துள்ளபோதிலும் அவ்வாறு அமையப்பெறாவிடில் நிலத்தின் முதலீட்டுப் பெறுமதியின்* | *1%* |
| *3. 10 பேர்ச்சுகளுக்கு மேற்பட்ட காணிகளில் வீடு நிர்மாணிப்பதற்கு முடிந்துள்ள போதிலும் அவ்வாறு அமையப் பெறாவிடில் நிலத்தின் முதலீட்டு பெறுமதியின்* | *1.5%* |

அக்காணியின் நில வீதத்தின் நூற்றுக்கு இரண்டு வீத வரி இக்காணியின் சொந்தக்காரரிடமிருந்து இவ்விடயத்தில் வருடாந்தம் அறவிடல் வேண்டும்.

2015, ஓகத்து மாதம் 28 மற்றும் 2015, திசெம்பர் 17 ஆந் திகதிகளில் நடாத்தப்பட்ட மாநகர சபையின் இல. 06:01 ஐக் கொண்ட சபை தீர்மானத்தின் பிரகாரம், (திருத்தத்துடன்) 2016 ஆம் ஆண்டிற்கு அல்லது அதற்கு பின்னர் செய்யப்படுகின்ற திருத்தங்களிற்குரியவாறு ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையினால் மேற்குறிப்பிடப் பட்டவாறு அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் விடயத்தில் வரி அறவிடப்படும் என பொது மக்கள் அறிந்துகொள்வதற்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சாந்தா பீ. லியனகே,
மாநகர ஆணையாளர்,
ஸ்ரீ ஜயவர்தன கோட்டே மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
2014, திசெம்பர் 4.

1-996